X

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருS.புவனேஷ்வரன் (எ)<br>அண்ணாமலை,<br>ஆணையாளர் (மு.கூ.பொ)<br>இராணிப்பேட்டை நகராட்சி,<br>இராணிப்பேட்டை | நகரமன்ற தலைவர்,<br>நகரமன்ற துணைத்தலைவர்,<br>நகரமன்ற உறுப்பினர்கள்,<br>இராணிப்பேட்டை நகரமன்றம்,<br>இராணிப்பேட்டை. |

ந.க.எண்.2109/2025/எச்1 நாள். 23.10.2025

பொருள் :- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் நகராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்கள் நடத்துதல் கூட்ட பொருள் அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – கூட்டங்கள் நடத்தி பொருள்கள் தேர்வு செய்து வழங்க கோருதல் – தொடர்பாக

பார்வை :-

1. அரசாணை (நிலை) எண்.324 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 17.10.2025
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.24470/2019/எம்ஏ2, நாள்.18.10.2025
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.169/2025/ஆ2, நாள்.22.10.2025.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி வழி கூட்டம் நாள்.23.10.2025

*************

பார்வை 1–ல் காணும் அரசாணையில், மாநகராட்சி, நகராட்சிப் பகுதி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் நகராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக (Convener) கொண்டு அவ்வார்டு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்களை 27.10.2025, 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் ஏதேனும் ஒரு நாளில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் மூன்று (3) கோரிக்கைகள் மட்டும் செயல்படுத்தும் விதமாக கோரிக்கைகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்தில் எடுத்துக்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

1 நகராட்சிப் பொதுமக்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும சேவைகளான குடிநீர் வழங்கல். திடக்கழிவு மேலாண்மை. தெருவிளக்கு பர. சாலைகள், பூங்கா, மழைநீர் வடிகால் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து எடுத்துரைத்து அவற்றில் நிலவும் சேவைக்குறைபாடுகள் தொடர்பாக விவாதித்தல்.

2 நகராட்சிப் பகுதிகளை பசுமையாக்கும் வகையில் திறந்தவெளி இடங்கள் சாலையோரப்பகுதிகள். குளக்கரைகள் மற்றும் ஏரிக்கரைகளில் சமூக ஆர்வலர்கள் தொழிற்சாலை/இதர நிறுவனங்கள் பங்களிப்புடன் மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பது குறித்து விவாதித்தல்

3 நகராட்சிப் பகுதிகளில் உள்ள பூங்காக்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கம் மூலம் பராமரிப்பு செய்வது குறித்து விவாதித்தல்

4 வடகிழக்குப் பருவமழை துவங்குவதற்கு முன்பாக மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் வழக்கமாக மழைநீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் குறித்து விவாதித்தல்

5 நகராட்சிப் பகுதிகளில் தூய்மைப்பணிகளை மேம்படுத்த பொதுமக்கள் பங்கேற்புடன் நடத்தப்படும் 'நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் செயல்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் குறித்து விவாதித்தல்.

6 நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் மேம்படுத்தும் முறைகள் குறித்து விவாதித்தல்

7 நகராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மாநகராட்சி நகராட்சிப் பகுதிகளிலுள்ள பள்ளிகளில் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் குறித்து விவாதித்தல்.

8 நகராட்சிப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புனரமைப்பு செய்து முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டுவர மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.

9 நகராட்சிகளில் அமைந்துள்ள நீர்நிலைகள் மாசு ஏற்படாமல் இருக்கவும் நீராதாரங்களை பாதுகாக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.

பார்வை 2-ல் கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் நகராட்சிகளில் நடத்தப்படும் இச்சிறப்புக் கூட்டத்திற்கு நகராட்சி ஆணையாளர்கள் வார்டு வாரியாக கூட்டுநரை (Convener) நியமித்து செயல்முறை உத்தரவுகளை பிறப்பித்து கண்காணிப்பு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு கூட்டத்தினை நடத்துவதற்கான கூட்டுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கூறியவாறு சிறப்பு வார்டு கூட்டம் 27.10.2025, மற்றும் 29.10.2025 அன்று காலை 11.00 மணி அளவில் வார்டு சபா கூட்டத்தினை நடத்தி கூட்டங்களில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் பொருள்கள் / கோரிக்கைகளை பட்டியலிட்டு அவற்றில் முன்னுரிமை அடிப்படையில் 3 பொருள்கள் / கோரிக்கைகளை தேர்வு செய்து தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Scanned with OKEN Scanner

| வ.எண் | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | நாள் | வார்டு எண் |
|---|---|---|---|
| 1 | பெ. முருகன், துப்புரவு ஆய்வாளர் | 27.10.2025 | 1 |
| | | 29.10.2025 | 20 |
| 2 | ப. சிவானந்தகுமார், உதவி வருவாய் அலுவலர் | 27.10.2025 | 2 |
| | | 29.10.2025 | 21 |
| 3 | பூ.பிரசாந்த், இளநிலைப் பொறியாளர் (திட்டம்) | 27.10.2025 | 3 |
| | | 29.10.2025 | 22 |
| 4 | மு.சேதுபதி இளநிலைப் பொறியாளர் (திட்டம்) | 27.10.2025 | 23 |
| | | 29.10.2025 | 4 |
| 5 | R.கோபால கிருஷ்ணன் உதவிப்பொறியாளர் | 27.10.2025 | 5 |
| | | 29.10.2025 | 24 |
| 6 | எம்.ராமு வருவாய் ஆய்வாளர் | 27.10.2025 | 6 |
| | | 29.10.2025 | 25 |
| 7 | கா.செந்தில்குமார் வருவாய் ஆய்வாளர் | 27.10.2025 | 7 |
| | | 29.10.2025 | 26 |
| 8 | பி.ஜோப் ஆனந்த ராஜ் உதவியாளர் | 27.10.2025 | 8 |
| | | 29.10.2025 | 27 |
| 9 | அ.கையும் வருவாய் உதவியாளர் | 27.10.2025 | 9 |
| | | 29.10.2025 | 28 |
| 10 | சா.ஜோயல், வருவாய் உதவியாளர் | 27.10.2025 | 11 |
| | | 29.10.2025 | 10 |
| 11 | வா.சத்திஷ்குமார் இளநிலை உதவியாளர் | 27.10.2025 | 13 |
| | | 29.10.2025 | 12 |
| 12 | சு.மாணிக்கம், வருவாய் உதவியாளர் | 27.10.2025 | 14 |
| | | 29.10.2025 | 15 |
| 13 | V. அசோக், பணி மேற்பார்வையாளர் | 27.10.2025 | 17 |
| | | 29.10.2025 | 16 |
| 14 | K. மோகன் பணிமேற்பார்வையாளர் | 27.10.2025 | 18 |
| | | 29.10.2025 | 29 |
| 15 | D. கவிபாரத் பணி ஆய்வர் | 27.10.2025 | 19 |
| | | 29.10.2025 | 30 |

23.10.25

ஆணையாளர் (மு.கூ.பொ),
இராணிப்பேட்டை நகராட்சி

23/10/2025

இணைப்பு : அரசாணை நகல்

நகல் பணிந்தனுப்பப்படுகிறது

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28
2. மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை.
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் –12

Scanned with OKEN Scanner

# வார்டு சிறப்புக் கூட்டம் குறித்த விவரம்

| | |
|---|---|
| நகராட்சியின் பெயர் | Ranipet |
| மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | 30 |

| வ.எண் | வார்டு எண் | சிறப்பு வார்டு கூட்டம் நடைபெறும் | | | சிறப்பு வார்டு கூட்டத்தின் கூட்டுநர் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நாள் | இடம் | நேரம் | பெயர் | பதவி | கைபேசி எண் |
| 1 | 1 | 27.10.2025 | அங்கன் வாடி மையம், காரை மருதி தெரு | காலை 11.00 மணி | பெ. முருகன், | துப்புரவு ஆய்வாளர் | 9443294898 |
| 2 | 2 | 27.10.2025 | நேரு நகர் அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | ப. சிவானந்தகுமார், | உதவி வருவாய் அலுவலர் | 9345638087 |
| 3 | 3 | 27.10.2025 | பெரியார் நகர் குடியிருப்போர் நல சங்கம் | காலை 11.00 மணி | பூ.பிரசாந்த், | இளநிலைப் பொறியாளர் (திட்டம்) | 9042865388 |
| 4 | 23 | 27.10.2025 | அம்மன் கோயில் தெரு, தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | மு.சேதுபதி | இளநிலைப் பொறியாளர் (திட்டம்) | 8778162833 |
| 5 | 5 | 27.10.2025 | கிரேட் நகர் அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | R.கோபால கிருஷ்ணன் | உதவிப்பொறியாளர் | 8072437643 |
| 6 | 6 | 27.10.2025 | பாட்டை தெரு தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | எம்ராமு | வருவாய் ஆய்வாளர் | 9626274274 |
| 7 | 7 | 27.10.2025 | ஒத்தவாடை தெரு தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | கா.செந்தில்குமார் | வருவாய் ஆய்வாளர் | 6381969060 |
| 8 | 8 | 27.10.2025 | கங்காதார நிதியுதவி பள்ளி, அம்மூர் ரோடு | காலை 11.00 மணி | பி.ஜோப் ஆனந்த ராஜ் | உதவியாளர் | 9566424131 |
| 9 | 9 | 27.10.2025 | ஓட்டேரி விளையாட்டுதிடல் அருகில் அங்கன்வாடி | காலை 11.00 மணி | அகையும் | வருவாய் உதவியாளர் | 9150129319 |
| 10 | 11 | 27.10.2025 | நடுத்தெரு தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | சா.ஜோயல், | வருவாய் உதவியாளர் | 8668067521 |
| 11 | 13 | 27.10.2025 | அங்கன் வாடி மையம் எம்பிடி ரோடு கங்காதார பள்ளி அருகில் | காலை 11.00 மணி | வா.சத்திஷ்குமார் | இளநிலை உதவியாளர் | 7373691552 |
| 12 | 14 | 27.10.2025 | டிஎம்என் தெரு தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | ச.மாணிக்கம், | வருவாய் உதவியாளர் | 7094377580 |
| 13 | 17 | 27.10.2025 | காட்டன் பஜார் அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | V. அசோக், | பணி மேற்பார்வையாளர் | 9786589875 |

Scanned with OKEN Scanner

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 18 | 27.10.2025 | லேபர் பள்ளி அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | K. மோகன் | பணி மேற்பார்வையாளர் | 6383749644 |
| | 19 | 27.10.2025 | பஜனை கோயில் தெரு அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | D. கவிபாரத் | பணி ஆய்வர் | 8489771710 |
| [illegible] | 20 | 29.10.2025 | காட்டன் பஜார் அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | பெ. முருகன், | துப்புரவு ஆய்வாளர் | 9443294698 |
| 17 | 21 | 29.10.2025 | அங்கன் வாடி மையம் , நீதி மன்ற வளாகம் மற்றும் உழவர் சந்தை எதிரில் | காலை 11.00 மணி | ப. சிவானந்தகுமார், | உதவி வருவாய் அலுவலர் | 9345638087 |
| 18 | 22 | 29.10.2025 | ஆர் ஆர் ரோடு மாவட்ட நுலகம் அருகில் அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | பூபிரசாந்த். | • இளநிலைப் பொறியாளர் (திட்டம்) | 9042865388 |
| 19 | 4 | 29.10.2025 | மந்தைவெளி தெரு அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | மு.சேதுபதி | இளநிலைப் பொறியாளர் (திட்டம்) | 8778162833 |
| 20 | 24 | 29.10.2025 | ஜாகிர் உசேன் தெரு உருது பள்ளி அரங்கம் | காலை 11.00 மணி | R.கோபால கிருஷ்ணன் | உதவிப்பொறியாளர் | 8072437643 |
| 21 | 25 | 29.10.2025 | சாமி தெரு இராஜேஷ்வரி பள்ளி விளையாட்டு திடல் | காலை 11.00 மணி | எம்.ராமு | வருவாய் ஆய்வாளர் | 9626274274 |
| 22 | 26 | 29.10.2025 | திரு வி க பள்ளி அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | கா.செந்தில்குமார் | வருவாய் ஆய்வாளர் | 6381969060 |
| 23 | 27 | 29.10.2025 | காந்தி நகர் வழைக்கர அம்மன் கோயில் தெரு தனியார் கட்டடிம் | காலை 11.00 மணி | பி.ஜோப் ஆனந்த ராஜ் | உதவியாளர் | 9566424131 |
| 24 | 28 | 29.10.2025 | ஆத்துக்கால்வாய் தெரு, தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | அகையும் | வருவாய் உதவியாளர் | 9150129319 |
| 25 | 10 | 29.10.2025 | சீனிவாசப்பேட்டை நகராட்சி பள்ளி கூட்ட அரங்கம் | காலை 11.00 மணி | சா.ஜோயல், | வருவாய் உதவியாளர் | 8662067521 |
| 26 | 12 | 29.10.2025 | கருமாரியம்மன் கோயில் தெரு அங்கன்வாடி மையம் | காலை 11.00 மணி | வா.சத்திஷ்குமார் | இளநிலை உதவியாளர் | 7373691552 |
| 27 | 15 | 29.10.2025 | கெலீஸ் ரோடு தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | சு.மாணிக்கம், | வருவாய் உதவியாளர் | 7094377580 |
| 28 | 18 | 29.10.2025 | சீயோன் நகர் பன்ஷன் அரங்கம் | காலை 11.00 மணி | V. அசோக், | பணி மேற்பார்வையாளர் | 9786589875 |
| 29 | 29 | 29.10.2025 | ஈஸ்வரன் கோயில் தெரு தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | K. மோகன் | பணி மேற்பார்வையாளர் | 6383749644 |
| 30 | 30 | 29.10.2025 | மாகவீர் நகர் தனியார் கட்டிடம் | காலை 11.00 மணி | D.கவிபாரத் | பணி ஆய்வர் | 8489771710 |

Scanned with OKEN Scanner

சுருக்கம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் – மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வார்டிலும் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்கள் நடத்துதல் – கூட்டம் நடத்தப்படுவதற்கான பொருள் – அனுமதி வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண்.324

நாள் 17.10.2025
புரட்டாசி – 31
திருவள்ளுவர் ஆண்டு 2056
படிக்கப்பட்டன:

(1) நகராட்சி நிருவாக இயக்குநரது கடிதம் ந.க.எண்.24470/2019/எம்ஏ2, நாள் 26.09.2025.

(2) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரது கடிதம் வ.து.ந.க.எண்.ஆர்2/ஏரியா சபா/002267/2022, நாள் 02.10.2025.

(3) பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந.க.எண்.14145/2025/இ2, நாள் 09.10.2025

******

ஆணை:

மேலே ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட கடிதங்களில் நகராட்சி நிருவாக இயக்குநர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர், அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவில் சிறப்புக் கூட்டம் நடத்தி மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட பொதுமக்களால் தெரிவிக்கப்படும் ஆலோசனை மற்றும் கருத்துக்களை பெற்று அதன் மீது உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். அதன்படி, வார்டு அளவில் மாநகராட்சி/ நகராட்சி/பேரூராட்சிகளில் அப்பகுதி மாமன்ற/நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் இக்கூட்டத்தினை மாநகராட்சி/ நகராட்சி/பேரூராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக கொண்டு அவ்வார்டு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் இக்கூட்டம் நடத்திட உரிய அனுமதியும், மேற்கொள்ள வேண்டிய பொருள்களுக்கு ஒப்புதல் அளிக்குமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

2. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரது செயற்குறிப்பினை கவனமாக பரிசீலித்து, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள ஒவ்வொரு வார்டிலும் அப்பகுதி மன்ற உறுப்பினர் தலைமையில் உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள ஒரு அலுவலரை கூட்டுநராக கொண்டு பொதுமக்கள் பங்கேற்புடன்

Scanned with OKEN Scanner

வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்களை 27.10.2025, 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் ஏதேனும் ஒரு நாளில் நடத்திட அரசு அனுமதி வழங்கி அவ்வாறே ஆணையிடுகிறது.

3. மேலும், மேற்படி கூட்டத்தில், மாநகராட்சி/நகராட்சி/ பேரூராட்சிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் பொதுமக்கள் சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து, முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் மூன்று (3) கோரிக்கைகள் மட்டும் செயல்படுத்தும் விதமாக கோரிக்கைகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்:-

(1) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிகளில் பொதுமக்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளான குடிநீர் வழங்கல். திடக்கழிவு மேலாண்மை, தெருவிளக்கு பராமரிப்பு, சாலைகள், பூங்கா, மழைநீர் வடிகால் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து எடுத்துரைத்து அவற்றில் நிலவும் சேவைக்குறைபாடுகள் தொடர்பாக விவாதித்தல்.

(2) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி பகுதிகளை பசுமையாக்கும் வகையில் திறந்தவெளி இடங்கள், சாலையோரப்பகுதிகள், குளக்கரைகள் மற்றும் ஏரிக்கரைகளில் சமூக ஆர்வலர்கள் தொழிற்சாலை/இதர நிறுவனங்கள் பங்களிப்புடன் மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பது குறித்து விவாதித்தல்.

(3) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கம் மூலம் பராமரிப்பு செய்வது குறித்து விவாதித்தல்.

(4) வடகிழக்குப் பருவமழை துவங்குவதற்கு முன்பாக மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் வழக்கமாக மழைநீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் குறித்து விவாதித்தல்

(5) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிப் பகுதிகளில் தூய்மைப்பணிகளை மேம்படுத்த பொதுமக்கள் பங்கேற்புடன் நடத்தப்படும் "நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்" செயல்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் குறித்து விவாதித்தல்.

(6) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் மேம்படுத்தும் முறைகள் குறித்து விவாதித்தல்.

(7) மாநகராட்சி / நகராட்சி/ பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மாநகராட்சி/நகராட்சி/ பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள பள்ளிகளில் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் குறித்து விவாதித்தல்.

(8) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புனரமைப்பு செய்து முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டுவர மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.

(9) மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிகளில் அமைந்துள்ள நீர்நிலைகள் மாசு ஏற்படாமல் இருக்கவும் நீராதாரங்களை பாதுகாக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.

Scanned with OKEN Scanner

4. மேலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூட்டங்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களில், முன்னுரிமை அடிப்படையில் மூன்று பொருள்களை தேர்வு செய்து மாநகராட்சி ஆணையர்கள் நேரடியாக நகராட்சி நிருவாக இயக்குநரகத்திற்கும், நகராட்சிகளைப் பொருத்தவரை நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள் நகராட்சிகள் வாரியாக தொகுத்து நகராட்சி நிருவாக இயக்குநரகத்திற்கும், பேரூராட்சிகளை பொறுத்தவரை பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்கள் பேரூராட்சிகள் வாரியாக தொகுத்து பேரூராட்சிகள் இயக்குநரகத்திற்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதன்பின்பு இவ்விவரங்கள் முதல்வரின் முகவரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், அவர்களே முதல்வரின் முகவரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இந்த சிறப்பு வார்டுக் கூட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட மூன்று கோரிக்கை விவரங்களை 'முதல்வரின் முகவரி' இணையதளத்தில் பதிவேற்றம் செய்தபின்பு, தீர்வுகாண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கண்காணிக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தா.கார்த்திகேயன்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்:**
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை – 600 028.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 600 028.
அனைத்து நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள்.
(நகராட்சி நிருவாக இயக்குநர் வழியாக)
அனைத்து பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து ஆணையர்கள்/செயல் அலுவலர்கள்
(துறைத் தலைவர்கள் வழியாக)
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.மு.2) துறை, சென்னை–600 009.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

Scanned with OKEN Scanner